பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

21 11 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கயானாவின் மிக உயரிய **The Order of Excellence** விருது, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

2. இந்தியா – **CORICOM** உச்சிமாநாட்டையொட்டி, டொமினிக், சூரினாம் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களை பிரதமர் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

3. சர்வதேச திரைப்பட விழா, இந்திய திரைப்படத்துறையின் மைல் கல்லாக விளங்குகிறது என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவருவதற்கு ஐ நா கொண்டுவந்த தீர்மானத்தை அமெரிக்கா நான்காவது முறையாக நிராகரித்துள்ளது.

5. ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா மற்றும் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<<>>>>>

கயானாவின் மிக உயரிய **The Order of Excellence** விருதை, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, அந்நாட்டு அதிபர் டாக்டர் மொஹமத் இர்பான் அலி வழங்கி கௌரவித்துள்ளார்.

கயானாவில் நடைபெறும் இரண்டாவது இந்தியா – காரிகாம் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக கயானா சென்றுள்ள திரு நரேந்திர மோடிக்கு, அந்நாடு இந்த விருதை வழங்கியுள்ளது.

சிறந்த ஆளுமைக்காகவும், உலக அரங்கில் வளர்ந்து வரும் நாடுகளுக்கான உரிமைகளுக்காகவும், இந்தியா – கயானா உறவுகளை மேம்படுத்துவதற்காகவும் திரு நரேந்திர மோடி ஆற்றிவரும் அரும்பணிகளை கௌரவிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த விருதை ஏற்றுக்கொண்ட பின், உரையாற்றிய பிரதமர், இந்திய மக்களுக்கு இந்த மாபெரும் விருதை அர்ப்பணிப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தியா – கயானா இடையே நீண்டகாலமாக ஆழமாக வேரூன்றி இருக்கும் இருநாட்டு மக்களின் உறவுகளுக்காகவும் இதனை அர்ப்பணிப்பதாக அவர் தெரிவித்தார்.

தமது கயானா வருகை இருதரப்பு நட்புறவை மேலும் வலுப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

வரலாற்று சிறப்பு மிக்க இந்தியா – கயானா உறவுகள் கலாச்சார பாரம்பரியத்தையும், இருதரப்பு நம்பிக்கையையும் அடிப்படையாக கொண்டது என்று அவர் கூறினார்.

அனைத்துத்துறைகளிலும் கயானாவுடன் தோள் கொடுத்து கடமையாற்ற இந்தியா எப்போதும் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தியா – கயானா இடையிலான நட்புறவு ஒட்டுமொத்த தெற்கத்திய நாடுகளுடனான உறவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

இந்தியா - காரிகாம் உச்சிமாநாட்டையொட்டி, டொமினிக் குடியரசின், பிரதமர் **Roosevelt** –யும் பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

இருநாடுகளுக்கும் இடையே மருத்துவம், பருவநிலை சவால்களை எதிர்கொள்வது, ஒட்டுமொத்த மேம்பாட்டுப்பணிகள், இருநாட்டு மக்களுக்கும் இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவது ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, சூரினாம் நாட்டின் அதிபர் **Chandra Prasad**-யும் சந்தித்தார்.

இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு, வர்த்தகம், வேளாண்மை உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து இருதலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

பின்னர், பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சூரினாமின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

**Tridanid Tobago** –வின் பிரதமர் டாக்டர் **'Keith** –யும், இந்த உச்சிமாநாட்டையொட்டி திரு நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

மின்னணு பணப்பரிவர்த்தனைக்கான யு பி ஐ தளத்தின் சேவைகளை **Tridanid Tobago** பயன்படுத்திக்கொள்வதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்தார்.

இந்த உச்சிமாநாட்டையொட்டி, மேலும் பல தலைவர்களையும், பிரதமர் திரு நரேந்திர மோடி சந்தித்து பேசி வருகிறார்.

**<<<<<<>>>>>**

இந்திய – அமெரிக்க உறவுகளுக்கு ஆதரவு தெரிவித்துவரும் ஜார்ஜியாவின் செனட் உறுப்பினர் திரு **Jon Ossoff** –க்கு, அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு **Vinay Mohan Kwatra** அவரை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது திரு **Ossoff** அளித்த ஆதரவு இந்திய – அமெரிக்க ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, திரு **Kwatra, New Hampshire** செனட் உறுப்பினர் **Jeanne Shaheen** இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு அளித்துவரும் ஆதரவுக்கு அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

அவர்களுடன் இணைந்து செயல்படுவதில் இந்தியா மிக்க ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திரு **Kwatra,** இரு அமெரிக்க தலைவர்களிடமும் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

மத்திய அரசின் தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியாக திரு கே சஞ்சய் மூர்த்தி இன்று பதவியேற்றுக் கொண்டார்.

அவருக்கு, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இப்பதவியை வகித்து வந்த திரு கிரிஷ் சந்திரா முர்மு, கடந்த ஆகஸ்ட் மாதம் ஓய்வுபெற்றதையடுத்து திரு சஞ்சய் மூர்த்தி இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்டார்.

முன்னதாக அவர், மத்திய அரசின் உயர்கல்வித்துறை செயலராக பதவி வகித்து வந்தார்.

**<<<<<<>>>>>**

சர்வதேச திரைப்பட விழா, இந்திய திரைப்படத்துறையின் மைல் கல்லாக விளங்குகிறது என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கோவாவில் நேற்று மாலை தொடங்கிய 55–ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் உரையாற்றிய அவர், இளம் திரைப்பட கலைஞர்களை ஊக்குவிக்கும் ஒரு தளமாக இந்த திரைப்பட விழா அமைந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், இளைஞர்களின் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை தூண்டுவதற்கும், அவர்களை நாளைய படைப்புகளுக்கு தயார்படுத்துவதற்கும் சர்வதேச திரைப்பட விழா உதவுவதாக குறிப்பிட்டார்.

இந்திய திரைப்பட சாதனையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பை சர்வதேச திரைப்பட விழா அமைத்து தந்திருப்பதாகவும் அவர் கூறினார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் தொடங்கியுள்ள ஒற்றைச்சாளர முறை, திரைப்பட தயாரிப்புகளுக்கான அனுமதியை எளிமையாக பெறுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

55-ஆவது சர்வதேச திரைப்பட விழாவில் இன்று 40-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன.

<<<<<<>>>>>

மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாக நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சுற்றுலா பயணிகள் குளிக்க எட்டாவது நாளாக தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

*(சவுண்ட் பைட் - திருமலைக்குமார் - 37 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

காஸாவில் உடனடியாக போர் நிறுத்தம் கொண்டுவருவதற்கு ஐ நா கொண்டுவந்த தீர்மானத்தை அமெரிக்கா நிராகரித்துள்ளது.

அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி கொண்டுவந்த தீர்மானத்திற்கு 14 நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

மற்ற 14 உறுப்பு நாடுகள் ஐ நா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

ஐ நா தீர்மானம் நிறைவேற்ற முடியாமல் போனதற்கு இந்த 14 நாடுகளின் சார்பில் வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 7-ஆம் தேதி முதல் ஐ நா-வில் காஸா போர் நிறுத்தம் கொண்டுவருவது தொடர்பாக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நான்காவது முறையாக அமெரிக்கா நிராகரித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஐ நா-வின் இந்திய பிரதிநிதி திரு ஹரிஷ், ஐ நா சபையில் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகள் தங்களது சொந்த அரசியல் காரணங்களுக்காக வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்துவதாக கூறினார்.

ஐ நா பொதுச்சபை கூட்டத்தில் பேசிய அவர், கடந்த 80 ஆண்டுகளாக இதே நிலை நீடிப்பதாகவும், 200-க்கும் மேற்பட்ட முறை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி, பல தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

ஐ நா உறுப்பு நாடுகளுக்கு இடையிலான சமத்துவ கொள்கையை பாதிக்கும் வகையில் இந்த நடைமுறை அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

வீட்டோ அதிகாரம் தார்மீக ரீதியாகவும், நீதி வழுவாமலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் இருப்பதாகவும் அவர் கூறினார்.

ஆப்பிரிக்க நாடுகளின் நிலைப்பாட்டையே இந்தியா ஆதரிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ நா பாதுகாப்புச் சபையில் சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

வீட்டோ உள்ளிட்ட ஐந்து நடைமுறைகளில் மாற்றங்கள் தேவை என்று இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ நா-வை உள்ளார்ந்த ஒரு அமைப்பாக கொண்டுவருவதற்கு மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும், இந்தியாவுக்கான நிரந்தர உறுப்பினர் திரு ஹரீஷ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா மற்றும் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அங்கிதா ரெய்னா 6-3, 6-3 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் லில்லி டெய்லரை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில், வைதேகி சௌத்ரி 6-1, 6-2 என்ற செட் கணக்கில், சீனாவின் **Jia Jing Lu** –வை வென்றார்.

----------------

ஆசிய மகளிர் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பையை வென்ற இந்திய அணியினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், இந்திய மகளிர் அணியினர் தொடக்கம் முதலே சிறப்பாக தங்களது திறமையை வெளிப்படுத்தி, தங்களது வெற்றியை உறுதி செய்திருப்பதாக கூறியுள்ளார்.

-----------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தெலுகு அணி – பெங்கால் அணியையும், பெங்களூரு அணி – ஹரியானா அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<END>>>>>